மேல்விஷாரம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை திரு.ப.திருமால்செல்வம்.

ந.க.எண்:105/2020/இ1. நாள்:10.09.2020.

பொருள்:- நிதிக்குழு- மேல்விஷாரம் நகராட்சி- 15வது மத்திய நிதிக்குழு ஆணையம்• 2021-2022 முதல் 2024-2025 நிதி தொடர்பான விவரங்கள் தயார் செய்ய தொடர்பு அலுவலராக (Nodal Officer) நகராட்சி பொறியாளர் அவர்களை நிர்ணயம் செய்து உத்திரவிடுதல்- தொடர்பாக.

பார்வை: நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்:12609/2020/எல்ஏ3. நாள்:26.08.2020.

*******

உத்திரவு:-

பார்வையில் கண்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, 15-வது மத்திய நிதிக்குழு ஆணையம் 2021-2022 முதல் 2024-2025 மானிய அளவீடு தொடர்பான விவரங்கள் தயார் செய்ய தொடர்பு அலுவலராக (Nodal Officer) நகராட்சி பொறியாளர் அவர்களை நிர்ணயம் செய்து உத்திரவிடப்படுகிறது.

மேலும், இது தொடர்பான பயிற்சியானது, வரும் செப்டம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் நகராட்சி பொறியாளர் மற்றும் கணக்கருக்கு பயிற்சி அளிக்கப்படும் என பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், பயிற்சிக்கான தேதி குறிப்பிட்டு வரப்பெற்றவுடன், மேற்படி பயிற்சியில் கலந்துகொள்ளுமாறு, மேற்படி அலுவலர்களுக்கு உத்திரவிடப்படுகிறது.

மேற்படி நியமிக்கப்பட்ட கண்காணிப்பு அலுவலர் 15-வது நிதிக்குழு ஆணையம் 2021-2022 முதல் 2024-2025 நிதி தொடர்பான விவரங்களை (City Finance Portal)-ல் பதிவேற்றம் செய்யப்பட்டதை சரிபார்த்து, ஆணையரிடம் தினசரி அல்லது காலாந்திர அறிக்கை சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

ப. திருமால் செல்வம் 10/9/2020
ஆணையாளர்,
மேல்விஷாரம் நகராட்சி.
10/9/2020

பெறுநர்,
திரு.சு.பாபு,
நகராட்சி பொறியாளர்(பொ),
நகல்:மேலாளர், கணக்கர்,சுகாதார ஆய்வாளர்
நகல்:இ1 எழுத்தர்(ம) எச்1 எழுத்தர்,
நகல்:ஆணையாளர் அவர்களின் மேசைக்கு
மேல்விஷாரம் நகராட்சி.

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது:-
1.நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-28.
2.நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர்-12.